தினமணி

**செம்மை நெல் சாகுபடி: விழிப்புணர்வு ஏற்படுமா?**

First Published : 02 Jul 2010 01:24:33 AM IST

புதுக்கோட்டை : குறைந்த செலவும், குறைவான நீர்த் தேவையும் கொண்ட செம்மை நெல் சாகுபடி முறை குறித்த விழிப்புணர்வை விவசாயிகள் பெற வேண்டுமென வேளாண் ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர். இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு தீவிரமாக பிரசாரம் செய்ய வேண்டும்.

பருவ நிலை மாற்றத்தால் கடந்த சில ஆண்டுகளாக மழை அளவு குறைந்து, லட்சக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் தரிசாகின. விவசாயிகள் மாற்றுத் தொழிலுக்குச் செல்லும் நிலை உருவானது.

பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி இல்லை என்ற நிலையில், வரும் ஆண்டுகளில் நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படும் என்பதை அரசிடம் வேளாண் ஆர்வலர்கள் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து, வேளாண் துறையினர் நெல் பயிர் சாகுபடியில் பல்வேறு புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகளிடம் அறிமுகம் செய்யத் தலைப்பட்டனர்.

அதில், குறைந்த செலவும், குறைவான நீர்த் தேவையும் கொண்ட புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய செம்மை நெல் சாகுபடி முறை முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதை, விவசாயிகளின் வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

கடந்த 1960-களில் மடகாஸ்கர் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவ பாதிரியார் ஹென்றி டி லலானோ எஸ்.ஆர்.ஐ. என்ற செம்மை நெல் சாகுபடி முறையைக் கண்டுபிடித்தார்.

நடைமுறை நெல் சாகுபடி முறையிலிருந்து மாறுபட்ட உழவியல் முறைகள் இதில் கடைப்பிடிக்கப்படுகின்றன. நாற்று தயாரித்தல், நடுதல், களைக் கட்டுப்பாடு, நீர்ப் பாசனம் போன்ற பொதுவான வழிமுறைகள் இதில் இருந்தாலும், ஒவ்வொரு முறையிலும் முற்றிலும் மாறுபட்ட நுட்பங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

இந்தச் சாகுபடி குறித்த கோட்பாடுகள் கடந்த 2001 முதல் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பல்வேறு நிலைகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, தமிழக விவசாயிகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டது.

மாநில அளவில் கடந்த ஆண்டு 7.5 லட்சம் ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டது, நிகழாண்டில் 8.5 லட்சம் ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வேளாண் துறை தெரிவிக்கிறது.

இதில், குறைந்த நீராதாரம் உள்ள புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொருத்தவரை, ஏறத்தாழ 90 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி பரப்பு உள்ள நிலையில், அதில் ஏறத்தாழ 25 ஆயிரம் ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி முறையை விவசாயிகள் மேற்கொள்வதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பரப்பளவை மேலும் அதிகரிப்பது என்பது விவசாயிகள் இதுகுறித்த விழிப்புணர்வைப் பெறுவதைப் பொருத்தே அமையும் என்கின்றனர் வேளாண் ஆர்வலர்கள்.

**முருங்கைக்காய் விலை "கிடுகிடு' உயர்வு**

First Published : 02 Jul 2010 12:00:00 AM IST



திருத்தணி, ஜூலை 1: முருங்கைக்காய் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

÷முருங்கை பயிரிட குறைவான தண்ணீர் இருந்தால் போதுமானது. மாதக்கணக்கில் தண்ணீர் இல்லாமல் போனாலும், மரம் பட்டுப்போகாது. மழை பெய்ததும் மீண்டும் துளிர் விட்டு, பூக்கும் தன்மையுடையது.

÷இதனால் திருத்தணி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் விவசாயிகள் முருங்கை மரங்களை அதிகம் வளர்த்து வருகின்றனர். இங்கு விளையும் முருங்கை காய்களில் 75 சதவீதம் திருத்தணி காமராஜர் மார்க்கெட்டிலேயே விற்பனையாகி விடுகிறது.
÷முருங்கைக்காய் ஆண்டு முழுவதும் காய்க்காமல் குறிப்பிட்ட சீசனில் மட்டும் அதிகம் காய்ப்பதால் சில நேரங்களில் விலை சரிவு ஏற்படுகிறது. இதை தவிர்க்க நாற்று விட்டு செடியை நடவு செய்தால் சீசன் இல்லாத நேரங்களில் காய் பிடித்து அதிக வருவாய் ஈட்டித்தரும் என வேளாண் அதிகாரிகள் கூறுகின்றனர்.
÷முருங்கைக் கீரையில் இரும்புச்சத்து அதிகம் இருப்பதால் மக்கள் இதை விரும்பிச் சாப்பிடுகின்றனர். முருங்கைக் கீரைக்கு ஆண்டு முழுவதும் கிராக்கி இருந்துகொண்டே இருக்கிறது. இதை பறித்ததும், உடனே சந்தைக்குக் கொண்டு வந்து விற்பனை செய்ய வேண்டும். காலம் கடந்தால் இலைகள் உதிரத் தொடங்கி விடும். இதனால் விவசாயிகள் பலர் முருங்கைகீரை விற்பனையில் ஆர்வம் காட்டுவதில்லை.
எனினும் முருங்கைகீரை விற்பனையிலும் நல்ல லாபம் பெற முடியும் என்பதே உண்மை.
÷முருங்கைக் காய்க்கு தற்போது சீசன் இல்லாததால், மொத்த உற்பத்தியில் 20 சதவீதம் மட்டுமே உற்பத்தியாகிறது. உற்பத்தி குறைவு என்பதாலும், தற்போது கல்யாண சீசன் என்பதாலும் முருங்கை காய் விலை கிடுகிடுவென விலை உயர்ந்து வருகிறது.
÷திருமண விருந்தில் சாம்பாருக்கு முருங்கைகாய் கூடுதல் சுவையைத் தரும் என்பதால் மக்கள் அதை அதிக விலை கொடுத்தும் வாங்குகின்றனர்.
÷இந்நிலையில் திருத்தணி காமராஜர் மார்க்கெட்டில் முருங்கைகாய் உள்ளூர் வரத்து மிகவும் குறைந்து விட்டதால், வியாபாரிகள் பிற பகுதிகளில் இருந்து கொண்டு வந்து இங்கு விற்பனை செய்கின்றனர்.
÷தற்போது மார்க்கெட்டில் நெட்டை ரகம் 20 காய் கொண்ட ஒரு கட்டு 75 ரூபாய்க்கும், குட்டை ரகம் 50 ரூபாய்க்கும் விற்பனையாகிறது.
÷தேங்காய் விலைக்கு இணையாக முருங்கைகாய் விற்பனையாவதால், முருங்கை பயிர் செய்த  விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பாசனத்துக்கு பாரூர் ஏரி நீர் 150 நாள்கள் விடப்படும்**

First Published : 01 Jul 2010 10:51:37 AM IST

கிருஷ்ணகிரி, ஜூன் 30: கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர் பெரிய ஏரியிலிருந்து முதல்போக சாகுபடிக்காக 150 நாள்கள் தண்ணீர் திறந்துவிடப்படும் என்று ஆட்சியர் வி. அருண் ராய் தெரிவித்தார்.

பாசன நீரை புதன்கிழமை திறந்துவிட்ட அவர் நிருபர்களிடம் கூறியது:

பாரூர் ஏரியின் மொத்த கொள்ளளவு 256 மில்லியன் கன அடி. ஏரியில் நீர்மட்டம் 15.6 அடி. தற்போது 11.6 அடி நீர் உள்ளது.

பாசனத்திற்கு புதன்கிழமை திறந்து விடப்பட்ட நீர் 26.11.2010 வரை 150 நாள்களுக்கு விடப்படும். பாரூர் பெரிய ஏரியின் கிழக்கு மற்றும் மேற்கு பிரதான வாய்க்கால்களில் முதல் 5 நாள்களுக்கு தொடர்ந்து தண்ணீர் விடப்படும்.

மீதமுள்ள நாள்களில் முறை பாசனம் வைத்து 3 நாள்களுக்கு வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிட்டு 4 நாள்களுக்கு மதகை மூடி வைத்தும் பாசனம் மேற்கொள்ளப்படும். கிழக்கு பிரதான வாய்க் கால் மூலம் 1,583.75 ஏக்கர் நிலமும், மேற்கு பிரதான வாய்க்கால் மூலம் 928.64 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறும்.

இதன் மூலம் ஏரி பாசன திட்டத்தின் மூலம் பாரூர், அரசம்பட்டி, பெண்டரஅள்ளி, கீழ்குப்பம், புலியூர், கோட்டப்பட்டி, ஜிங்கல்கதிரம்பட்டி, தாதம்பட்டி, விருப்பம்பட்டி கிராமங்கள் பயன்பெறும். விவசாயிகள் நீரை மிக சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் மக்களவை உறுப்பினர் இ.ஜி. சுகவனம், பர்கூர் சட்டப் பேரவை உறுப்பினர் கே.ஆர்.கே.நரசிம்மன், காவேரிப்பட்டணம் சட்டப் பேரவை உறுப்பினர் டி.ஏ.மேகநாதன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் எம்.ஆர். ராஜேந்திரன், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ஆதிமகேந்திரன், இணை இயக்குநர் (வேளாண்மை) கா.ராஜன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் எஸ்.செங்குட்டுவன், உதவிப் பொறியாளர் ஆர்.கௌதமன் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**"மா'-வில் கூடுதல் லாபம் பெற யோசனை!**

First Published : 01 Jul 2010 10:47:47 AM IST

ஒசூர்: மா நடவில் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தினால் கூடுதல் லாபம் பெற முடியும் என்று தோட்டக் கலைத் துறை தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் மா உற்பத்தி பல மாவட்டங்களில் இருந்தாலும், கிருஷ்ணகிரி மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. இங்கு 40 ஆயிரம் ஹெக்டேரில் மா சாகுபடி செய்யப்படுகிறது.

ஒரு ஹெக்டேரில் சராசரியாக 8 மெட்ரிக் டன் மாம்பழம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. ஏற்கெனவே 30 அடி இடைவெளியில் மாமரங்கள் நடப்பட்டு வந்தன. இதனால் ஒரு ஹெக்டேருக்கு 100 மரங்கள் மட்டுமே நடப்பட்டு வந்தன.

புதிய தொழில்நுட்பத்தில் 15 அடி இடைவெளியில் மா மரங்களை நடுவதன் மூலம் ஒரு ஹெக்டேருக்கு அதிக எண்ணிக்கையில் மரங்களை நட்டு 50 சதவீதம் உற்பத்தியை அதிகரிக்க முடியும். இதன் மூலம் ஹெக்டேருக்கு 12 மெட்ரிக் டன் மாம்பழம் உற்பத்தி செய்ய முடியும். இந்த மா அடர்வு முறை தோட்டக் கலைத் துறை மூலம் பரிந்துரைக்கப்படுகிறது.இதுவரை மா சாகுபடி மானாவாரி பயிராக சாகுபடி செய்து வந்ததை சொட்டு நீர் பாசனம் மூலம் நீர்ப் பாய்ச்சுவதால் மாவில் உற்பத்தி அதிகபட்சமாக இரு மடங்காக உற்பத்தி செய்யலாம்.

இதை கருத்தில் கொண்டு மா நெருக்கு நடவு செய்வோருக்கு மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்க தோட்டக் கலைத் துறை விண்ணப்பங்களை வரவேற்கிறது.

இதுகுறித்து தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் பி.காளியப்பன் கூறியது:

மா மரங்கள் சுமார் 35 வகைகள் இம்மாவட்டத்தில் பயிர் செய்யப்பட்டாலும் பெங்களூரா, பாலபாடு, பங்கனப்பள்ளி, செந்தூரா, நீலம், சேலம், மல்லிகா, அல்போன்சா, பையூர்-1 ஆகிய ரகங்களே அதிக அளவு பரப்பில் பயிர் செய்யப்படுகின்றன.

மா நெருக்கு நடவு செய்ய அல்போன்சா, மல்லிகா, பையூர்-1, பசந்த், ரத்னா, பனேசான் ஆகிய ரகங்கள் மிகவும் உகந்தவை. மா நெருக்கு நடவுக்கு அரசு மானியம் முதலாம் ஆண்டுக்கு ரூ.24,750, 2-ம் ஆண்டுக்கு ரூ.15,600, 3-ம் ஆண்டுக்கு ரூ.15,150 என உரம், சொட்டு நீர்ப்பாசன கருவிகளுக்காக தோட்டக் கலைத்துறை வழங்குகிறது.

ஆர்வமுள்ள விவசாயிகள் உதவி இயக்குநரின் செல்போன் எண் 94436-32500-ஐ தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**தொலைதூரக் கல்வியில் விவசாயம்!**

First Published : 01 Jul 2010 10:47:32 AM IST

வேலூர்: விவசாயிகளுக்கு அனுபவப் படிப்போடு, சான்றிதழ் படிப்பும் தேவை எனும் நோக்கில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கடந்த 2005-ம் ஆண்டு முதல் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வியை வழங்கி வருகிறது.

விவசாயிகள், பள்ளிப்படிப்பைத் தொடர முடியாதவர்கள், சுயதொழில் தொடங்க முன்வருவோர், கிராம மகளிர், கிராமப்புற, நகர்ப்புற இளைஞர்கள் ஆகியோருக்காக வேளாண் சார்ந்த பல்வேறு சான்றிதழ் படிப்புகளை வழங்கி வருகிறது.

இதில் பருத்தி மற்றும் மக்காச்சோள வீரிய ஒட்டு விதை உற்பத்தி, நவீன கரும்பு சாகுபடி, காய்கறி விதை உற்பத்தி, தோட்டக்கலைப் பயிர்களில் நாற்றங்கால் தொழில்நுட்பங்கள், காளான் வளர்ப்பு, பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்துதல், தரிசு நில மேம்பாடு, தேனீ வளர்ப்பு, திடக்கழிவுகளும் மண்புழு உரம் தயாரித்தலும், பண்ணைக் கருவிகள்-இயந்திரங்கள் பழுது பார்த்தலும் பராமரித்தலும், தென்னை சாகுபடி, அலங்காரத் தோட்டம் அமைத்தல், நவீன பாசன மேலாண்மை, நவீன களை மேலாண்மை, காட்டாமணக்கு சாகுபடி மற்றும் பயோடீசல் தயாரித்தல், மலர் சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு, அங்கக வேளாண்மை போன்ற பாடங்கள்
நடத்தப்படுகின்றன.

இவற்றில் சேர்ந்து பயில 6-ம் வகுப்பு முடித்திருந்தால் போதுமானது. 18 வயதுக்கு மேல் உள்ள எவரும் பயிலலாம்.

6 மாதங்களுக்கான இச்சான்றிதழ் படிப்புக்கு ரூ.1,500 கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

ஒருவர் ஒரே நேரத்தில் ஒரு பாடத்தில் மட்டுமே சேர முடியும்.

நேர்முகப் பயிற்சி வகுப்புகள் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படுகிறன.

பயிற்சிக் கட்டணத்தை "ஈஐதஉ இபஞுத, ஞஈக" டஹஹ்ஹசக்ஷப்ங் ஹற் நஆஐ, பசஅம ஆதஅசஇஏ, இஞஐஙஆஅபஞுதஉ-641 003 என்ற முகவரிக்கு வரைவோலை எடுத்து, ""இயக்குநர், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர் - 641 003" என்ற முகவரிக்கு நேரிலோ, தபால் மூலமோ அனுப்பலாம்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வேலூர் மாவட்ட விவசாயிகள், இளைஞர்கள் பயனடையலாம் என வேலூர் மாவட்ட ஆட்சியர் செ.ராஜேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**சிறிய வெங்காயம் சாகுபடி குறித்து பண்ணைப் பள்ளி முகாம்**

First Published : 01 Jul 2010 10:10:32 AM IST

பெரம்பலூர், ஜூன் 30: பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஒன்றியத்தில் உள்ள இரூர் கிராமத்தில், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் மற்றும் வேளாண்மைத் துறை சார்பில், வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் சிறிய வெங்காயத்தில் பண்ணைப் பள்ளி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முகாமில், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ஜெ. கதிரவன் பேசியது:

சிறிய வெங்காயம் சாகுபடி குறித்த அனைத்து தொழில்நுட்பங்களும், விவசாயிகளுக்கு செயல் விளக்கம் மற்றும் பயிற்சிகள் மூலம் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களையும், அதை கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகளையும் கண்டு உணரலாம்.

கிராமப்புறங்களில் வயல்வெளிகளைத் தேர்வு செய்து, வாரம் ஒருமுறை பயிற்சி அளிக்கப்படும். இந்தப் பண்ணைப் பள்ளியின் ஓர் அங்கமாக சிறிய வெங்காயத்தில் விதைக் காய்களை நேர்த்தி செய்வது குறித்த செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்படும். மேலும், இதனால் ஏற்படும் நன்மைகளும் எடுத்துக் கூறப்படுகிறது.

எனவே, விவசாயிகள் இதுபோன்ற முகாம்களில் பங்கேற்று புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும் என்றார் அவர்.

முகாமில் விரிவாக்கத் துறை மற்றும் தொழில்நுட்ப வல்லுநர் ஜெ. கிருஷ்ணன் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.

இதில் ஆலத்தூர் கோட்ட வேளாண் உதவி அலுவலர்கள் கனகராஜ், கலியபெருமாள், மணிகண்டன், வேல்முருகன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**அக்ரி கிளினிக் ஆங்கிலப் பெயர் மாற்றம்**

First Published : 02 Jul 2010 08:49:31 AM IST

கடலூர், ஜூலை 1: தினமணிச் செய்தியின் விளைவாக, வேளாண் துறையில் ஆங்கிலத்தில் இருந்த சேவை மையத்தின் பெயர் தமிழாக்கம் செய்யப்பட்டு உள்ளது.
÷மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன் ஊராட்சி ஒன்றியத்துக்கு ஒரு வேளாண் சேவை மையம் வீதம் தொடங்கப்பட்டு வருகிறது. வேளாண் பட்டதாரிகள், ஓய்வு பெற்ற வேளாண் அலுவலர்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களுக்கு 50

சதம் மானியத்தில் ரூ.6 லட்சம் அரசு நிதி வழங்கி, அதன் மூலம் இந்தச் சேவை மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

÷விவசாயிகளுக்கு அரசு வழங்கும் மானியங்கள் மற்றும் சலுகைகளைப் பெற்றுத் தருவது, வேளாண் கருவிகளை வாடகைக்கு வழங்குவது, மண் பரிசோதனை செய்வது, வேளாண் இடுபொருள்களை விற்பனை செய்வது போன்ற பணிகளை இந்தச் சேவை மையங்கள் மேற்கொள்ளும்.

÷இந்த வேளாண் சேவை மையங்களுக்கு, "அக்ரி கிளினிக்' என்றும் சிறிய மண் பரிசோதனை நிலையத்துக்கு "மினி மண் பரிசோதனை நிலையம்' என்றும், வேளாண் துறை பெயரிட்டு செயல்படுத்தி வந்தது.

÷நமது படிப்பறிவற்ற பாமர வேளாண் குடிமக்களுக்கான இத்திட்டம், அவர்களுக்குப் புரியம் வகையில், இந்த மையங்களின் பெயர்கள் தமிழில் இருக்கலாமே என்ற ஆலோசனையைத் தெரிவிக்கும் வகையில் 21-6-2010 அன்று தினமணி செய்தி வெளியிட்டு இருந்தது.

÷இதுகுறித்துக் கடலூர் மாவட்ட வேளாண் துறை விரைந்து நடவடிக்கை எடுத்து, ஆங்கிலத்தில இருந்த பெயர்களைத் தமிழாக்கம் செய்து உள்ளதாக, கடலூர் வேளாண் உதவி இயக்குநர் சீ.இளவரசன் அண்மையில் செய்திக் குறிப்பு வெளியிட்டு இருக்கிறார்.

÷அக்ரி கிளினிக் என்பது "வேளாண் ஆலோசனை மையம்' என்றும், மினி சாயில் டெஸ்டிங் லேப் என்பது, "சிறு மண் பரிசோதனை நிலையம்' என்றும் தமிழில் பெயர் மாற்றம் செய்து, பெயர்ப் பலகை சம்பந்தப்பட்ட மையத்தில் வைக்கப்பட்டு இருப்பதாகவும் இளவரசன் செய்திக் குறிப்பில் தெரிவித்து உள்ளார்.

தினமலர்

**வேளாண்மை பல்கலைக் கழகத்தின் மூலம் தொலைதூர கல்வியில் சான்றிதழ் படிப்புகள்**

விழுப்புரம்: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் திறந்தவெளி மற் றும் தொலைதூர கல்வி இயக்ககத் தின் மூலம் 21 சான்றிதழ் படிப் பிற் கான மாணவர் சேர்க்கை நடக்கிறது.தமிழ்நாடு வேளாண்மை பல் லைக்கழகம் திறந்தவெளி மற்றும்

தொலைதூர கல்வி இயக்ககம் மூலம் மகளிர் மற்றும் இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறும்வகையில் சான்றிதழ் பாடங்கள் நடத்தப்படுகிறது.பருத்தி மற்றும் மக்காசோளம் வீரிய ஒட்டு விதை உற்பத்தி, நவீன கரும்பு சாகுபடி, காய்கறி விதை உற்பத்தி, தோட்டக்கலை பயிர்களில் நாற்றங்கால் தொழில் நுட்பங்கள், காளான் வளர்ப்பு, பழங்கள், காய்கறிகளை பதப்படுத்துதல், தரிசு நில மேம்பாடு, தேனீ வளர்ப்பு, திடக்கழிவுகளும், மண்புழு உரம் தயாரித்தல், பண்ணை கருவிகள் இயந்திரங்கள் பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தலும் போன்ற சான்றிதழ் படிப்புகள் நடத்தப்படுகிறது.

இதேபோல் தென்னை சாகுபடி, பருத்தி சாகுபடி, அலங்கார தோட் டம் அமைத்தல், நவீன பாசன மேலாண்மை, மூலிகை பயிர்கள், அடுமனை பொருட்கள், மிட்டாய் மற்றும் சாக்லெட் தயாரித்தல், நவீன களை மேலாண்மை, காட்டாமணக்கு சாகுபடி மற்றும் பயோடீசல் தயாரித்தல், மலர் சாகுபடி, பட்டுப் புழு வளர்ப்பு, அங்கக வேளாண்மை ஆகிய 6 மாத சான்றிதழ் படிப்புகளும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் திறந்தவெளி மற்றும் தொலைதூர இயக்ககத்தில் நடத்தப்படுகிறது. இந்த 21 வகையான பயிற்சிகளில் சேர தமிழை வழிமொழியாக கொண்டு 6ம் வகுப்பு படித்திருக்க வேண்டும். ஆறு மாத பயிற்சி காலமும், 1500 ரூபாய் பதிவு கட்டணமாகவும் செலுத்த வேண்டும். 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். ஒரு நபர் ஒரே நேரத்தில் ஒரு பாடத்தில் மட்டுமே சேர முடியும். நேர்முக பயிற்சி வகுப்புகள் மாதம் ஒருமுறை சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும். பயிற்சி கட்டணம் எக்காரணத்தை கொண்டும் திருப்பி தரமாட்டாது.

விண்ணப்பத்தை பெறுவதற்கும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படி வத்தினை அனுப்புவதற்கும் இயக்குநர், திறந்தவெளி மற்றும் தொலைதூர கல்வி இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை-641 003 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் பயிற்சி கட்டணத்தை நேரடியாக வைக்க வேண்டும். மேலும், இது குறித்து விபரங்கள் அறிய 0422-6611229, 9442111047, 9442111048 என்ற தொலைபேசியை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த விருப்பமுள்ள ஆண், பெண் இருபாலரும் இந்த சான்றிதழ் படிப்பில் சேர்ந்து பயன்பெற தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் திறந் தவெளி மற்றும் தொலைதூர இயக் ககத்தின் இயக்குனர் வள்ளுவபாரி தாசன் தெரிவித்துள்ளதாக விழுப் புரம் கலெக்டர் பழனிசாமி அறிவித் துள்ளார்.

---

**பசுமை குடில் அமைக்க மானியம்**

ஈரோடு: உழவர் சந்தை விவசாயிகள் உயர்தொழில் நுட்ப பசுமை குடில்களை அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.
ஈரோடு தோட்டக்கலை துணை இயக்குனர் சுப்பிரமணியன் கூறியதாவது:சம்பத்நகர் உழவர் சந்தையில், காய்கறி விதைகள் விற்பனை அங்காடி செயல்படவுள்ளது. விவசாயிகள் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைக்க தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்குவர். உழவர் சந்தை அடையாள அட்டை கிழிந்தால், தோட்டக்கலை உதவி இயக்குனரிடம் கொடுத்து புதிய அட்டை பெற்றுக் கொள்ளலாம். உழவர் சந்தை அடையாள அட்டை வைத்துள்ள விவசாயிகள், அவரவர் தோட்டத்தில் உள்ள காய்கறிகளை மட்டுமே எடுத்து வர வேண்டும். புதிதாக சாகுபடி செய்திருந்தால், பயிர் சாகுபடி குறித்த பதிலை அலுவலரிடம் பெற்றுக் கொள்ளலாம்.கீரைகள், காய்கள், கனிகளை நல்ல தரத்தோடு உற்பத்தி செய்து கூடுதல் லாபம் பெற தேசிய தோட்டக்கலைத் துறை மூலம் "உயர்தொழில் நுட்ப பசுமை குடில்' அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. உழவர்சந்தை விவசாயிகளுக்கு கால் ஏக்கர் பரப்புக்கு, சிறு குறு விவசாயிகளுக்கு நான்கு லட்சத்து 67 ஆயிரத்து 500 மானியம், மற்ற விவசாயிகளுக்கு மூன்று லட்சத்து 8,550 ரூபாய் மானியமாகவும் வழங்கப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

**நிலக்கடலை சாகுபடி: கோபியில் சுறுசுறுப்பு**

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில் நிலக்கடலை சாகுபடி சுறுசுறுப்பாக துவங்கியுள்ளது.கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம் வட்டாரத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் ஃபிப்ரவரி மாதம் நிலக்கடலை பயிரிடப்பட்டது. டி.எம்.வி., 2, டி.எம்.வி., 7, கோ-2, ஏ.எல்.ஆர்., 3, வி.ஆர்.ஐ., 2 ஆகிய ரகங்கள் அதிகளவில் பயிரானது. காய்கள் முற்றிய நிலையில் தற்போது அறுவடை துவங்கியுள்ளது.நிலக்கடலை பயிரை பொறுத்தவரை அதிக மழை இல்லாமல், அதே சமயம் நிலம் வறண்ட நிலையிலும் இருக்க கூடாது. கோபி பகுதியில் மூன்று மாதமாக சில பகுதிகளில் அதிக மழையும், சில பகுதிகளில் மழை இல்லாத நிலையும் இருந்தது. இதனால், நிலக்கடலை மகசூல் குறைந்தது.ஏக்கருக்கு ஐந்து பொதி வரை நிலக்கடலை கிடைக்கும். ஆனால், மாறுபட்ட சீதோஷ்ண நிலை காரணமாக மூன்று பொதி மகசூல்தான் கிடைத்தது. கடந்த சீஸனில்

ஒரு கிலோ நிலக்கடலை 20 முதல் 25 ரூபாய் வரை கிடைத்தது.தற்போது கிலோவுக்கு 28 முதல் 30 ரூபாய் வரை கிடைக்கிறது. விதை கடலைக்கு 33 ரூபாய் வரை கிடைக்கிறது. விலை உயர்ந்துள்ள நேரத்தில், மகசூல் குறைந்ததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

**விவசாயிகள் புள்ளி விபரம் இணை இயக்குனர் ஆய்வு**

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் வட்டாரத்தில் உள்ள அனைத்து விவசாயிகளின் அடிப்படை புள்ளி விபரங்களை இணையதளத்தில் பதிவு செய்யும் பணி துவங்கியுள்ளது. அதை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) நேரில் ஆய்வு செய்தார்.பள்ளிபாளையம் வட்டாரத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் விவசாயிகளிடம் உள்ள நிலப்பரப்பு, சாகுபடி பரப்பு, சர்வே எண் உட்பட அனைத்து அடிப்படை விவரங்களையும் சேகரித்து இணையதளத்தில் பதிவு செய்யும் பணி நடத்து வருகிறது.அந்தந்த பகுதி உதவி வேளாண் அலுவலர்கள் வருவாய் கிராமங்களுக்கு வந்து, அடிப்படை விவரங்களை விவசாயிகளிடம் சேகரித்து வருகின்றனர். ம்மாதத்தில் துவங்கப்பட்ட பணி தொடர்ந்து நடக்கிறது. வேளாண் துறையின் பல்வேறு திட்டங்களை பள்ளிபாளையம் வட்டாரத்தில் சிறப்பாக செயல்படுத்தவும், அனைத்து விவரங்களையும் ஒருங்கிணைத்து திட்டமிடுவதற்கும் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.இரண்டு கம்யூட்டர் மூலம் இப்பணி முழுமையாக மேற்கொள்ளப்படுகிறது. இதை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) பிரபாகரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அலுலர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்த இணை இயக்குனர், விவசாயிகளின் அடிப்படை விவரங்கள் எதுவும் விடுபடாமல் இணையதளத்தில் பதிவு செய்யுமாறு உத்தரவிட்டார்.வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன், வேளாண் அலுவலர் கவிதா, துணை வேளாண் அலுவலர் ஞானபிரகாசம் உட்பட பலர் பங்கேற்றனர்.

**பால் விலை உயர்வு**

விருதுநகர்,: விருதுநகரில் நேற்று முதல் பால் விலை லிட்டருக்கு 5 ரூபாய் உயர்ந்தது. விருதுநகரில் பால்விலை இது வரை லிட்டருக்கு 20 ரூபாயாக இருந்தது. நேற்று முதல் 25 ரூபாயானது. பால் விலை உயர்ந்துள்ளதால் ஓட்டல்களில் டீ, காபி விலையும் விரைவில் உயர உள்ளது.

**எலுமிச்சை விளைச்சலை அதிகரிக்கும்நுண்ணூட்ட சத்துகள்: தோட்டக்கலை அதிகாரி விளக்கம்**

திருநெல்வேலி:எலுமிச்சை விளைச்சலை அதிகரிக்கும் நுண்ணூட்ட சத்துகள் குறித்து கீழப்பாவூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:எலுமிச்சை ஒரு முக்கியமான பழப்பயிராகும். எலுமிச்சை சாகுபடியில் நுண்ணூட்ட சத்துகளின் பங்கு மிக முக்கியமானதாகும். பேரூட்ட சத்துகளை மட்டும் இப்பயிருக்கு தொடர்ந்து இடுவதால் நுண்ணூட்ட சத்து குறைபாடு தோன்றி விளைச்சல் பாதிக்கப்படுகிறது.எலுமிச்சøயில் பெரும்பாலும் துத்தநாக குறைபாடு காணப்படுகிறது.

இக்குறைபாடு அதிகமாகும் போது இலைகள் சித்து கிளைகள் குட்டையாகி புதர் போன்று காணப்படும். பழங்களின் எண்ணிக்கை குறைந்து காணப்படும். சிலசமயம் பழங்கள் வெளிரிய நிறத்தில் காணப்படும்.இக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய ஒரு மரத்திற்கு 500 கிராம் துத்தநாக சல்பேட் உரத்தினை அடியுரமாக மக்கிய தொழுஉரம் அல்லது மணலுடன் கலந்து இட வேண்டும். மேலும் 500 கிராம் துத்தநாக சல்பேட்டை 100 லிட்டர் நீரில் கலந்து கரைசலை மரம் பூப்பதற்கு முன் 30 நாட்கள் இடைவெளியில் இரு முறைகள் இலைகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.

மணற்பாங்கான நிலங்களில் போரான் சத்து நீரில் கரைந்து அதிகம் வெளியேறிவிடுவதால் இச்சத்து குறைபாடு காணப்படுகிறது. சுண்ணாம்பு சத்து அதிகம் உள்ள நிலங்களில் போரான் சுண்ணாம்புடன் இணைந்து எளிதில் கரையாத நிலைக்கு மாற்றப்படுவதால் சுண்ணாம்பு நிலங்களில் இச்சத்து குறைபாடு அதிகம் காணப்படுகிறது.குறைபாடு உள்ள மரங்களில் இளம் இலைகளில் பழுப்பு அல்லது மஞ்சள் நிறத் திட்டுக்கள் நரம்புகளுக்கிடையே தோன்றும். பின் இலைகள் வாடிவிடும். கிளைகளின் நுனியிலும், பூத்தண்டிலும், பழங்களிலும் திரவம் போன்ற பசை கசியும். பிஞ்சுகள் உதிர்ந்து விடும்.

பழத்தில் கோந்து போன்ற பிசின் கலந்து காணப்படும். பழங்கள் உலர்ந்து கல் போன்று இருக்கும்.இக்குறைபாட்டை நிவரத்தி செய்திட மரத்திற்கு 50 கிராம் போராக்ஸ் உரத்தினை 10 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும். மேலும் குறைபாடு தோன்றியவுடன் 300 கிராம் போராக்ஸ் நுண்ணூட்ட சத்தினை 100 லிட்டர்

நீரில் கலந்து இலைகள் நன்கு நனையும்படி 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும் என கீழப்பாவூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**வேளாண் கண்காட்சி கருத்தரங்கு நிறைவு**

அரியலூர்: அரியலூரில் இரண்டு நாட்களாக நடந்த வேளாண்மை கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நிறைவடைந்தது.

அரியலூர் மாவட்ட வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) சார்பில், அரியலூர் காவேரி மஹாலில் இரண்டு நாட்கள் நடந்த வேளாண்மை கண்காட்சி மற்றும் கருத்தரங்கை, மாவட்ட கலெக்டர் ஆபிரகாம் தலைமையில், மத்திய அமைச்சர் நெப்போலியன் நேற்றுமுன்தினம் துவக்கி வைத்தார். வேளாண்மைத்துறை மேம்பாட்டுக்காக 40 ஸ்டால்கள் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை, அரியலூர் எம்.எல்.ஏ., பாளை அமரமூர்த்தி உள்ளிட்ட பலரும் பார்வையிட்டனர்.

அரியலூர் மாவட்டத்திலுள்ள ஆறு பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து வந்த 700க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்ற இரண்டு நாள் கருத்தரங்கில், செம்மைநெல் சாகுபடி, பயறுவகை சாகுபடி, முந்திரி சாகுபடி, எண்ணெய் பனை சாகுபடி, நிலக்கடலை சாகுபடி, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு. நவீன முறையில் வெள்ளாடு மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்பு, நவீன வேளாண் பண்ணைக்கருவிகள், துல்லிய பண்ணையம், மரப்பயிர் சாகுபடி, பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பு, மல்பெரி மற்றும் பட்டு வளர்ப்பு தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட தலைப்புகளின்கீழ் நாமக்கல் கால்நடை டாக்டர் செந்தில், வேளாண்துறை இயக்குநர் விஜயகுமார், அரியலூர் மண் ஆய்வுநிலைய அலுவலர் ராமலிங்கம், பெரம்பலூர் ஹேன்ஸ் ரோவர் கல்லூரி கதிரவன் உள்ளிட்ட பலரும் பயிற்சியளித்துப் பேசினர். நிறைவு விழாவில் அரியலூர் வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் சந்தானகிருஷ்ணன் வரவேற்றார். வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சிவக்குமார், பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கான சான்றுகளை வழங்கிப் பேசினார். வேளாண்மை உதவி இயக்குநர்கள் ராஜாங்கம், பழனிச்சாமி, ஆசைத்தம்பி, ராஜேந்திரன்,

லதா, உதவி அலுவலர்கள் ராஜேந்திரன், காசிநாதன் மற்றும் விவசாயிகள் பலரும் பங்கேற்றனர். வேளாண்மை துணை இயக்குநர் விஜயகுமார் நன்றி கூறினார்.

**தரமில்லாத விதைகளால் பீட்ரூட் சாகுபடியில் நஷ்டம்: விவசாயிகள் புகார்**

உடுமலை: "தரமில்லாத விதைகளால் ஆண்டுதோறும் பீட்ரூட் சாகுபடியில் விளைச்சல் குறைந்து நஷ்டம் ஏற்படுவதால் உடுமலை பகுதியில் சாகுபடி பரப்பு பல மடங்கு குறைந்துள்ளது', என விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் களிமண் விளைநிலங்களில் பீட்ரூட் அதிகளவு சாகுபடி செய்யப்பட்டு வந்தது. மலைப்பகுதிகளில் விளையும் பீட்ரூட்டை விட அதிக விளைச்சலும், அதிக எடை காரணமாக நல்ல விலையும் கிடைத்து வந்தது.இந்நிலையில், கடந்த சில ஆண்டுகளாக பீட்ரூட் சாகுபடி பரப்பு உடுமலை பகுதியில் பல மடங்கு குறைந்துள்ளது. தரமில்லாத விதைகள், மாறிய பருவநிலை, மண் வளம் குறைந்தது உட்பட காரணங்களால் பீட்ரூட் சாகுபடி முற்றிலுமாக மறையும் நிலை ஏற்பட்டுள்ளது.கடந்த சீசனில் பெரியகுளம், செங்குளம் மற்றும் பி.ஏ.பி., பாசனத்திற்கு பயிரிடப்பட்ட பீட்ரூட் சாகுபடியில் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது. ஏக்கருக்கு சராசரியாக 14 டன் வரை கிடைத்து வந்த விளைச்சல் 6 டன்னாக குறைந்துள்ளது.இது குறித்து பெரியகுளம் பகுதி விவசாயிகள் கூறியதாவது: பீட்ரூட் சாகுபடிக்கு தேவையான தரமான விதைகள் தற்போது கிடைப்பதில்லை. விதைகள் நடவு செய்த பின் முளைக்காத இடங்களில் மீண்டும் விதை நடப்படும். தற்போது ஏழு முறை வரை தப்பு பயிர் நடவு மேற்கொள்ள வேண்டிய அவல நிலை உள்ளது.


இது குறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் விவசாயிகள் சார்பில் புகார் அளிக்கப்பட்டது. முளைக்காத விதைகள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டதில் விதையில் பிரச்னை இல்லை என ஆய்வு முடிவுகள் வழங்கப்பட்டது. கடந்த சீசனில் விளைச்சல் பல மடங்கு குறைந்து நஷ்டம் ஏற்பட்டுள்ளது.தொடர்ந்து, விளைச்சல் குறைந்து வருவதால் விவசாயிகள் பீட்ரூட் சாகுபடியை கைவிட்டுள்ளனர். தற்போது உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் 150 ஏக்கர் மட்டுமே பீட்ரூட் பயிரிடப்பட்டுள்ளது. மலைப்பகுதிகளை விட தரமான பீட்ரூட் உடுமலை பகுதியில் விளைந்து வந்தது. மீண்டும் அந்த நிலை உருவாக தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் உரிய ஆய்வு நடத்தி ஆலோசனை வழங்க வேண்டும்.சாகுபடியில் சொட்டு நீர் பாசனம் உட்பட புதிய முறைகளை

அறிமுகப்படுத்தியும் எந்த மாற்றமும் இல்லை. போதிய திரட்சி இல்லாமல் விளைவதால் உள்ளூர் பீட்ரூட்டிற்கு வெளிமாவட்ட காய்களை விட குறைந்த விலையே நிர்ணயிக்கப்படுகிறது. தற்போது கிலோ 7 ரூபாய் வரையே விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. இது குறித்து அதிகாரிகள் ஆய்வு நடத்தி நடவடிக்கை எடுக்காவிட்டால் பீட்ரூட் சாகுபடி உடுமலை பகுதியில் முற்றிலுமாக காணமால் போகும் நிலை ஏற்படும். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

---

தினத் தந்தி

***உள்நாட்டில் தேவைப்பாடு உயர்ந்து வருவதால் சமையல் எண்ணெய் இறக்குமதி 14 சதவீதம் அதிகரிக்க வாய்ப்பு***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு 2009–10–ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நம் நாட்டில் சமையல் எண்ணெய் இறக்குமதி, மதிப்பின் அடிப்படையில் 14 சதவீதம் அதிகரித்து ரூ.32,000 கோடி அளவிற்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த முந்தைய பருவத்தில் ரூ.28,000 கோடி மதிப்புக்கு இருந்தது. உள்நாட்டில் உற்பத்தி சற்று தேக்கம் அடைந்துள்ள நிலையில், தேவைப்பாடு அதிகமாக உள்ளதே இறக்குமதி உயர்விற்கு முக்கிய காரணமாகும்.*
*எண்ணெய் வித்துக்கள்*
*இந்தியா, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் முன்னணி நாடுகளுள் ஒன்றாக உள்ளது.*

இந்தியாவில் ஆந்திரா, கர்நாடகா, குஜராத், ராஜஸ்தான் மற்றும் மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் எண்ணெய் வித்துக்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. மத்திய மற்றும் தென் மாநிலங்களில் எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் அநேகமாக தன்னிறைவு ஏற்பட்டுள்ளது.

பல்வேறு வகையான எண்ணெய் வித்துக்களில் கடுகு, ஆளிவிதை, நிலக்கடலை, சூரியகாந்தி, சோயாபீன், எள், ஆமணக்கு, தேங்காய், பருத்தி விதை ஆகியவை நம் நாட்டில் பிரதானமாக சாகுபடி செய்யப்படுகின்றன. தேங்காய் எண்ணெய் கொப்பரைத் தேங்காய் மூலம் பெறப்படுகிறது. முக்கிய எண்ணெய் வித்துக்களில் தேங்காய் மட்டும் பெருந்தோட்டப் பயிர்கள் துறையைச் சேர்ந்தது. இந்தியாவில், எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படும் மொத்த பரப்பளவில் 85 சதவீதம் நிலக்கடலை, கடுகு மற்றும் சோயாபீன் ஆகியவையே சாகுபடி செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க வேளாண் துறை, வரும் 2010–11–ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தில், இந்தியாவின் சமையல் எண்ணெய் உற்பத்தி 13 சதவீதம் உயர்ந்து 79.10 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என தெரிவித்துள்ளது. இது, நடப்பு பருவத்தில் 70 லட்சம் டன்னாக இருக்கும் என்று முன்னறிவிப்பு செய்துள்ளது. குறிப்பாக, எதிர்வரும் பருவத்தில், கடுகு எண்ணெய், சோயா எண்ணெய், கடலை எண்ணெய் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என மதிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா – பிரேசில்

சர்வதேச அளவில் அமெரிக்கா, பிரேசில், சீனா, இந்தியா, அர்ஜென்டினா, பராகுவே மற்றும் கனடா ஆகிய நாடுகளில் அதிக அளவில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உலகின் மொத்த எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இந்த நாடுகளின் பங்களிப்பு 96 சதவீதம் என்பது கவனிக்கத்தக்கது. இதர அனைத்து நாடுகளின் பங்களிப்பு 4 சதவீதம் என்ற அளவில் மிகவும் குறைவாக உள்ளது.

சமையல் எண்ணெயைப் பொறுத்தவரை, நம் நாடு கடந்த 1994–95–ஆம் ஆண்டு பருவத்தில் 5 சதவீதமே இறக்குமதியை சார்ந்திருந்தது. இது, தற்போது 50 சதவீதமாக உயர்ந்துள்ளது என சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

**உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 12.92%–ஆக சரிவு**



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், ஜூன் 19–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 12.92 சதவீதமாக சரிவடைந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில் 16.90 சதவீதமாக மிகவும் அதிகரித்திருந்தது.*
*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், பருப்பு வகைகள், காய்கறிகள் போன்றவற்றின் விலை குறைந்திருந்தது. குறிப்பாக, கம்பு (6%), காபி (3%), பச்சை பயிறு மற்றும் கடலை பருப்பு (தலா 1%) ஆகியவற்றின் விலை குறைந்திருந்தது. இருப்பினும், கச்சா ரப்பர், கச்சா பட்டு, ஆமணக்கு விதை (தலா 1 சதவீதம்) ஆகியவற்றின் விலை அதிகரித்திருந்தது.*
*சென்ற ஓர் ஆண்டில், உருளைக்கிழங்கு விலை 40 சதவீத அளவிற்கும், வெங்காயம் விலை 7 சதவீத அளவிற்கும் குறைந்திருந்தது. அதேசமயம், தேங்காய் விலை 31.57 சதவீதம் உயர்ந்திருந்தது.*

**ஊட்டியில், தங்கம் போல் உயரும் தக்காளி விலை**



ஊட்டி மார்க்கெட்டில் விற்பனைக்கு குவிந்துள்ள தக்காளி.

*ஊட்டி, ஜூலை.2–*
*ஊட்டியில் தங்கம் விலை போன்று தக்காளி விலையும் உயர்ந்து வருகிறது.*
*காய்கறிகள்*
*நீலகிரி மாவட்டத்தில் கேரட், பீன்ஸ், முட்டைகோஸ், மேரக்காய், காளிபிளவர் போன்ற மலைத்தோட்ட காய்கறிகள் விளைவிக்கப்படு கிறது. ஆனால் வெங்காயம், தக்காளி, முருங்கைக்காய், பாகற்காய் போன்றவை சமவெளி பகுதிகளில் இருந்து தான் வருகிறது. சமவெளி பகுதியில் இருந்து வரும் காய்கறிகளின் விலை ஒரு சில நாட்கள் அதிகமாக இருக்கும். பின்னர் குறையும். ஆனால் தக்காளி விலை கடந்த மாதங்களில் ரூ15–ல் இருந்து ரூ.20 வரை விற்பனையானது.*
*உயரும் தக்காளி விலை*
*கடந்த ஜூன் மாதம் கடைசி வாரத்தில் இருந்து தக்காளி விலை அதிகரிக்க தொடங்கியது. மாதத்தின் முதல் நாளான நேற்று ஊட்டி மார்க்கெட்டில் ஒரு கிலோ தக்காளி ரூ.40க்கு விற் பனையானது. தங்கத்தின் விலையை போன்று தக் காளி*

*விலையும் உயர்ந்து வருகிறது. தக்காளி விளைச் சல் குறைவு மற்றும் வரத்து குறைவு காரணமாக விலை அதிகரித்து வருவதாக கூறப் படுகிறது. இது குறித்து ஊட்டி மார்க்கெட் வியாபாரி பாபு கூறியதாவது:–*

*வரத்து குறைவு*

*தற்போது தக்காளி விலை ஒரு கிலோ ரூ.40க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை அதிகமானதற்கு காரணம் கோவையில் இருந்தும், மைசூரில் இருந்து தக்காளி கொண்டு வரப்படுகிறது. சமீபகாலமாக மைசூர், குண் டல்பேட், அங்களா போன்ற பகுதிகளில் மழையின் காரண மாக தக்காளி விளைச்சல் குறைவாக உள்ளது. இதனால் குறைந்த அளவிலான தக்காளியே வருகிறது.*

*25 முதல் 28 கிலோ வரை உள்ள ஒரு பெட்டி தக்காளி ரூ.850க்கு வாங்கப்படுகிறது. இந்த தக்காளியை ரூ.40க்கு விற்பனை செய்கிறோம். இந்த விலை இன்னும் அதிகமாக தான் வாய்ப்பு இருக்கிறது. வரத்து அதிகமாகும் போது தான் விலை குறையும்.*

*உருளைகிழங்கு*

*மைசூரில் இருந்து கொண்டு வரப்படம் சின்ன வெங்காயம் ஒரு கிலோ ரூ.30–க்கும், பெரிய வெங்காயம் ரூ.20–க் கும், கத்திரிக்காய் ரூ.32–க்கும் தற்போது விற்பனை செய்கிறோம். நீலகிரி மாவட்ட காய்கறிகள் உருளைகிழங்கு, காளிபிளவர் போன்றவைக்கு விலை உயரவில்லை. உருளை கிழங்கு ஒரு கிலோ ரூ.20க்கும், காளிபிளவர் ரூ.15 முதல் ரூ..25 வரையும் விற்பனை செய்யப்படுகிறது.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

*ஊட்டி மார்க்கெட்டில் நேற்று ஒரு கிலோ தக்காளி ரூ.40 விற்பனை செய்யப் பட்டாலும், உழவர்சந்தையில் ஒரு கிலோ தக்காளி ரூ.28 முதல் ரூ.32 வரை விற்பனை ஆனாது குறிப்பிடத்தக்கது ஆகும்.*